# லண்டனில் போலியோ மற்றும் MMR
# கேட்ச்-அப் தடுப்பு மருந்துகள்

**லண்டனில் உள்ள 1 முதல் 11 வயது வரையிலான உரிய தடுப்பு மருந்துகளை உரிய காலங்களில் எடுத்திராத குழந்தைகளுக்கு, அவர்களுக்குரிய போலியோ மற்றும் MMR தடுப்பூசிகள் GP சர்ஜரிகள், ஆரம்பப் பள்ளிகள் மற்றும் சமூக கிளினிக்குகள் மூலம் வழங்கப்படுகின்றன.**

## MMR மற்றும் போலியோவிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க தடுப்பூசிகள் ஏன் மிகவும் அவசியமாகின்றன?

2022 ஆம் ஆண்டில், லண்டனில் உள்ள கழிவுநீர் மாதிரிகளில் போலியோ வைரஸ் கண்டறியப்பட்டது. இது வைரஸ் மக்களிடையே பரவுகிறது என்பதைக் காட்டுகிறது. சமீபத்திய கண்காணிப்புகள் நோய்த்தொற்று குறைந்துள்ளது என்று கூறினாலும், முழுமையாக தடுப்பூசி போடாதவர்கள் அல்லது தடுப்பூசிகளுக்கு சரியாக பதிலளிக்காதவர்கள் இன்னமும் போலியோவால் பாதிக்கப்படும் அபாயத்தில் இருக்கலாம்.

இந்த ஆண்டு (2023) லண்டனில் தட்டம்மை (measles) நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இங்கிலாந்து முழுவதும், சராசரியாக 10 குழந்தைகளுக்கு 1 குழந்தை MMR தடுப்பூசிகளை முழுவதுமாகப்பெற்றுக்கொண்ட நிலையில் இல்லை, குறிப்பாக லண்டனின் சில பகுதிகளில் இது 5 குழந்தைகளுக்கு 2 குழந்தைகள் என்ற அளவில் குறைவாக உள்ளது . இதனால் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு அம்மை நோய் வரும் அபாயம் உள்ளது, குறிப்பாக மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள், மற்றும் தடுப்பூசி போடப்படாத சமூகங்களில் உள்ளவர்களிடையே இந்நோய் பரவுகிறது.

## MMR மற்றும் போலியோ தடுப்பூசிகள் பாதுகாப்பானவையா?

ஆம், அவை மிகவும் பாதுகாப்பானவை, அத்துடன் அவை உலகளவில் மில்லியன் கணக்கான குழந்தைகளை நோய்களிலிருந்து பாதுகாத்துள்ளன.

## MMR தடுப்பூசிக்கும் ஆட்டிசம் இற்கும் இடையே தொடர்பு உள்ளதா?

MMR தடுப்பூசிக்கும் ஆட்டிசம் இற்கும் இடையே எந்தத் தொடர்பும் இருப்பதற்கான எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. பல ஆய்வுகள் இதைப்பற்றி ஆராய்ந்தன.

## குழந்தைகளுக்கு தடுப்பு மருந்துகள் எவ்வாறு உட்செலுத்தப் படுகின்றன ?

இரண்டு தடுப்பூசிகளும் தொடையில் அல்லது மேல் கையின் தசையில் ஊசி மூலம் கொடுக்கப்படுகின்றன.



# எந்த வயதில் என் குழந்தைக்கு வழக்கமான தடுப்பூசிகள் தேவைப்படும்?

| வயது | தடுப்பூசி மருந்து | எந்த நோய்க்கெதிராக பாதுகாக்கிறது |
|---|---|---|
| 8 வாரங்கள் | 6 இன் 1 தடுப்பூசி மருந்து (6 in 1 Vaccine) (1வது டோஸ்) | – பிஃப்தீரியா(Diphtheria), ஹெபடைடிஸ் B(Hepitis B), Hib ((ஹீமோபிலஸ் காய்ச்சல் Type B)) இளம் பிள்ளை வாதம் (Polio), டெட்டனஸ் (Tetanus), கக்குவான் இருமல் (Whooping Cough)( பெர்டூசிஸ் (pertussis)) |
| | ரோட்டா வைரஸ் தடுப்பூசி மருந்து(Rotavirus Vaccine) (1வது டோஸ்) | – ரோட்டா வைரஸ் (Rotavirus) |
| | MenB (1வது டோஸ்) | – மெனிங்கோகோகல் குழு b பாக்டீரியா (Meningococcal Group b bacteria) |
| 12 வாரங்கள் | 6 இன் 1 தடுப்பூசி மருந்து (6 in 1 Vaccine) (2வது டோஸ்) | – (மேலே பார்க்க) |
| | ரோட்டா வைரஸ் தடுப்பூசி மருந்து(Rotavirus Vaccine)(2வது டோஸ்) | – ரோட்டா வைரஸ் (Rotavirus) |
| | நிமோகோகல் (பி.சி.வி) தடுப்பூசி | – ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா (Streptococcus Pneumoniae) |
| 16 வாரங்கள் | 6 இன் 1 தடுப்பூசி மருந்து (6 in 1 Vaccine) (3வது டோஸ்) | – (மேலே பார்க்க) |
| | MenB (2வது டோஸ்) | – (மேலே பார்க்க) |
| 1 வருடம் | Hib/MenC | – Hib (ஹீமோபிலஸ் காய்ச்சல்Type B), மூளைக்காய்ச்சல் C (Meningitis C). |
| | MMR (1வது டோஸ்) | – தட்டம்மை(Measles), கூகைக்கட்டு (Mumps), ரூபெல்லா (Rubella) |
| | நியூமோகோகல் (Pneumococcal) (PCV) (2வது டோஸ்) | – ஸ்ட்ரெப்டோகாக்கஸ் நிமோனியா (Streptococcus Pneumoniae) |
| | மூளைக்காய்ச்சல் பி(MenB) (3வது டோஸ்) | – (மேலே பார்க்க) |
| 18 மாதங்கள் | MMR (2வது டோஸ்) | – தட்டம்மை (Measles), கூகைக்கட்டு(Mumps), ரூபெல்லா (Rubella) |
| | தென்கிழக்கு லண்டன் பெருநகரங்களில் வாழும் குழந்தைகளுக்கு | |
| 2-16 வருடங்கள் | காய்ச்சல் தடுப்பூசி (ஒவ்வொரு ஆண்டும்) | – காய்ச்சல் (சளிக்காய்ச்சல்) |
| 3 வருடங்கள் & 4 மாதங்கள் | 4 இன் 1 (4 in 1)(முன்-பள்ளி பூஸ்டர்) | – பிஃப்தீரியா(Diphtheria), டெட்டனஸ் (Tetanus), கக்குவான் இருமல் (Whooping Cough), இளம் பிள்ளை வாதம் (Polio) |
| 12-13 வருடங்கள் | மனித பாபில்லோமா நோய்க்கிருமி(HPV) தடுப்பூசி மருந்து | – மனித பாபில்லோமா வைரஸ் (Human Papillomavirus) |
| 14 வருடங்கள் | 3 இன் 1 (3 in 1) (டீனேஜர் பூஸ்டர்) | – டெட்டனஸ் (Tetanus), பிஃப்தீரியா (Diphtheria), இளம் பிள்ளை வாதம் (Polio) |
| | மூளைக்காய்ச்சல் ஏ.சி.டபுல்யூ.வை (MenACWY) | – மூளைக்காய்ச்சல் (Meningitis), செப்டிசீமியா (Septicaemia) |

